TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை 17.3 BNSS
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8213031/

1. District மாவட்டம் : கிருஷ்ணகிரி PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண். 05/AC/2024 Date நாள் 20.09.20

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்புச் சட்டம், 1988 Sections பிரிவுகள்: 7(a)

   (ii) Act சட்டம்: திருத்தப்பட்ட சட்டம் 2018 Sections பிரிவுகள்: 7 r/w 12

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் — Date to : நாள் வரை 20.09.2024

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை 10.00 மணிக்கு முன்பு

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 20.09.2024 Time : நேரம் 21.00 மணி

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம் 21.30 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக தன்னிச்சையாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 1 கி.மீ. வடகிழக்கு

   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி வட்டார போக்குவரத்து அலுவலகம், கிருஷ்ணகிரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. பிரபு (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் K. சண்முகம்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 21.04.1983 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —

   (f) Occupation : தொழில் காவல் ஆய்வாளர் (g) Address : முகவரி ஊ.த.க. பிரிவு, கிருஷ்ணகிரி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்.
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) [illegible] S/o விஸ்வநாதன், MVI, Gr-I, கிருஷ்ணகிரி
   2) B. ஷரிப் S/o பாட்சா, 2B1 ஷாப்ஜான் தெரு, கோட்டை, கிருஷ்ணகிரி.
   3) M. பழனி S/o மாணிக்கநாடார், சோபநூர் ஈட்ரோடு, கிருஷ்ணகிரி
   4) J. சென்றாயன் S/o ஜடையப்பன், மகாராஜாகடை, கிருஷ்ணகிரி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றம்முறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   தாமதம் இல்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

விபரம் இத்துடன் தனித்தாள்களில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

SHO, AC, KGI 20/09/24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
21.09.2024 at 0900hrs.

Name: பெயர் S.பிரபு
Rank: நிலை ..................No. எண் ..........
காவல் ஆய்வாளர்,
ஊ.நு.க. பிரிவு,
கிருஷ்ணகிரி.

**கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.5/AC/2024 u/s 7 (a) & 7 r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வ.எண்.12-ன் தொடர்ச்சி.**

20.09.2024 ஆம் தேதி காலை 10.00 மணியளவில் நான் அலுவலக பொறுப்பில் இருந்தபோது கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரியில் இயங்கிவரும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இன்று அதிகப்படியான வாகனங்களை வருடாந்திர புதுப்பிப்பு செய்யவுள்ளதாகவும், அதிகபடியான புதிய வாகனங்கள் பதிவு செய்யவுள்ளதாகவும், மோட்டார் வாகன ஆய்வாளர் மேற்படி பணிகளை செய்ய இடைத்தரகர்களிடமிருந்து அதிகப்படியான தொகையை கையூட்டாக பெறுவதாகவும் கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் அரசு சாட்சிகள் (1) திரு.S.ரத்தினகுமார், வருவாய் ஆய்வாளர், உத்தனப்பள்ளி உள்வட்டம், வட்டாட்சியர் அலுவலகம், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம், (2) திருமதி.V.யசோதா, முதுநிலை வருவாய் ஆய்வாளர் (சிப்காட்), தனி வட்டாட்சியர் அலுவலகம் (நில எடுப்பு), சூளகிரி, கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் இருபால் காவல் குழுவினருடனும் 20.09.2024-ஆம் தேதி காலை 11.25 மணிக்கு கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு பின்புறம் உள்ள கிருஷ்ணகிரி வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு சென்றடைந்தோம். அப்போது வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு முன்புறம் உள்ள காலி இடத்தில் வாகன ஓட்டுனர் உரிமம் பெறுவதற்கான தேர்வு நடைபெறும் தளத்தில் சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் சில நபர்கள் கையில் ஆவணங்களுடன் நின்றுகொண்டிருந்தனர். மேலும், அங்கு ஓட்டுனர் தேர்வினை ஆய்வு செய்துகொண்டிருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 திரு. V.ஆனந்தன் என்பவரிடம் நான் என்னுடன் வந்த அரசு சாட்சிகள் மற்றும் காவலர் குழுவினரையும் அறிமுகம் செய்துகொண்டு, திடீர் சோதனைக்காக வந்த விவரத்தை தெரிவித்தேன். பிறகு நான் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ஆனந்தன் அவர்களையும், அவருடன் இருந்த சில நபர்களையும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் மத்திய பகுதிக்கு அழைத்து வந்தேன். மேலும், அந்த அலுவலகத்தில் உள்ள அனைத்து அலுவலர்களையும் மத்திய பகுதியில் ஆஜர் செய்து, அவர்களிடம் நான் என்னுடன் வந்த அரசு சாட்சிகள் மற்றும் காவலர் குழுவினரையும் அறிமுகம் செய்துகொண்டேன். பிறகு நான் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ஆனந்தன் முன்னிலையில் அந்த அலுவலகத்தில் பணிபுரியும்

அலுவலர்களான திரு.M.வெங்கடேசன், செல்வி. S.பிரீத்தி, திரு.C.நேருஜீ, திருமதி.R.விமலா, திரு.V.சிதம்பரம்பிள்ளை திருமதி.M.நிஷா திரு.M.கோபிநாத் திரு.P.விஜயன் மற்றும் திரு.K.தங்கதுரை ஆகியோரை அரசு சாட்சிகள் மற்றும் காவலர் குழுவினரின் உதவியுடன் சோதனை செய்து அவர்கள் வைத்திருந்த சொந்த பணம் குறித்து அவர்களிடம் விளக்கம் கேட்க, மேற்படி அலுவலர்கள் தாங்கள் வைத்திருந்த பணத்திற்கு கூறிய விளக்கத்திற்கு சரியான முகாந்திரம் இருந்ததால் அவர்கள் வைத்திருந்த பணம் அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பிறகு மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ஆனந்தன் முன்னிலையில் வட்டார போக்குவரத்து அலுவலக வளாகத்திலிருந்து அழைத்து வந்த தனி நபர்களிடம், அவர்கள் வைத்திருந்த பணம் குறித்து சோதனை செய்து அவர்களிடம் விளக்கம் கேட்க, திரு. ஆர்.ரவிக்குமார், திரு. சி.ஜி.முனுசாமி, திரு. ஏ.ஜானகிராமன், திரு. பி.விஜயராஜ், திருமதி. எம்.மகாதேவி, திரு. என்.முருகன், திரு. டி.சுந்தர், திரு. ஜி.ஆடல்அரசன், திரு. ஆர்.பரசுராமன், திரு. எஸ்.அரவிந்த், திரு. எம்.தமிழழகன், திரு. கே.ஜி.நூர்அகமது மற்றும் திரு. எஸ்.காதர் ஆகியோர்கள் அவர்கள் வைத்திருந்த பணத்திற்கு கூறிய விளக்கத்திற்கு சரியான முகாந்திரம் இருந்ததால் அவர்கள் வைத்திருந்த பணம் அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அதன்பிறகு, நான் அரசு சாட்சிகளுடன் மோட்டார் வாகன ஆய்வாளரை அழைத்துக்கொண்டு, மேற்படி அலுவலகத்தின் மேல்தளத்திற்கு சென்ற போது, அந்த தளத்தில் படிக்கட்டினை ஒட்டி மேற்குபுறத்தில் வடக்கு முகம் பார்த்தவாறு ஒரு கணினி அறை இருந்தது. அந்த அறையில் மூன்று நபர்கள் அமர்ந்திருந்தார்கள். அவர்களில் ஒருவர் மேற்படி அறையில் தென்மேற்கு மூலையில் கிழக்குமுகம் பார்த்தவாறு அமர்ந்து கொண்டு கணினி மேசையில் பணி செய்துகொண்டிருந்தார். அவர் என்னை பார்த்ததும் அவரது கையில் வைத்திருந்த பணத்தை அவருக்கு இடதுபுறத்தில் இருந்த மர மேசையின் மீது வைத்திருந்த சில ஆவணங்களுக்கு நடுவில் மறைத்து வைத்தார். பிறகு நான் அரசு சாட்சிகளின் முன்னிலையில் அந்த அறையில் இருந்த அந்த தனிநபரான திரு.ஷரிப் என்பவரின் இருக்கை மற்றும் இடதுபுறம் இருந்த மர மேசையின் மீது இருந்த ஆவணங்களை சோதனை செய்ய, மேற்படி இருக்கைக்கு இடதுபுறம் இருந்த மர மேசையின் மீது இருந்த ஆவணங்களுக்கு மத்தியில் பணம் ரூ.17,600/-இருந்தது. அந்த பணத்தை பற்றி அவரிடம் விளக்கம் கேட்க, அவர் சற்று நேரம் அமைதியாக இருந்தார். பின்பு மேற்படி பணம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம்

ஏற்கத்தக்க வகையில் இல்லாததாலும், அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் கூறியதாலும் அந்த பணம் வாகனங்களை வருடாந்திர புதுப்பிப்பு செய்யவதற்காகவும், புதிய வாகனங்கள் பதிவுசெய்வதற்காகவும், வாகன ஓட்டுனர்கள் மற்றும் உரிமையாளர்களிடமிருந்து லஞ்சமாக பெற்று மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ஆனந்தன் அவர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருக்ககூடும் என்று நம்புவதற்கு சரியான முகாந்திரம் இருந்ததால் மேற்படி பணம் ரூ.17,600/- விசாரணையின் நிமித்தம் செயல்முறை நடவடிக்கைகள் மூலம் என்னால் கைப்பற்றப்பட்டது. பின்னர் தனிநபர் திரு.ஷரிப் அவர்களிடம் வேறு பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அவர் ஆம் என்று கூறி அலுவலகத்திற்கு வெளியே அழைத்துச்சென்று போர்ட்டிகோவிற்கு பக்கம் நிறுத்திவைக்கப்பட்டிருந்த TN 24 BA 0123 என்ற பதிவு எண் கொண்ட அவரது Honda Activa வாகனத்தை சோதனை செய்ய அந்த இருசக்கர வாகனத்தின் இருக்கைக்கு கீழ் இருந்த டிக்கியிலிருந்து ஒரு மஞ்சள் நிற தாம்பூலப்பையில் பணம் ரூ.1,00,000/- இருந்தது. நான் அந்த பணத்தை பற்றி விளக்கம் கேட்க, அந்த பணம் தனது சொந்த பணம் என்றும், தனது சொந்த வேலைக்காக காலை வீட்டிலிருந்து எடுத்து வந்ததாக தெரிவித்தார். அதற்கான ஆவண ஆதாரம் ஏதும் உள்ளதா என விசாரிக்க, அவர் கூறிய விளக்கம் ஏற்கதக்க வகையில் இல்லாததாலும், அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் கூறியதாலும் அந்த பணம் வாகனங்களை வருடாந்திர புதுபிப்பு செய்யவதற்காகவும், புதிய வாகனங்கள் பதிவுசெய்வதற்காகவும், வாகன ஓட்டுனர்கள் / உரிமையாளர்கள் மற்றும் வாகன ஓட்டுனர் பயிற்சி பள்ளிகளிலிருந்தும் லஞ்சமாக பெற்று மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ஆனந்தன் அவர்களுக்கு கொடுப்பதற்க்காக வைத்திருக்ககூடும் என்று நம்புவதற்கான சரியான முகாந்திரம் இருந்ததால் மேற்படி பணம் ரூ.1,00,000/- மஞ்சள் நிற திருமண தாம்பூலப்பையுடன் விசாரணையின் நிமித்தம் செயல்முறை நடவடிக்கைகள் மூலம் என்னால் கைப்பற்றப்பட்டது. பின்னர், மீண்டும் அந்த கணினி அறைக்கு வந்து அங்கு புரோக்கராக செயல்பட்டுவரும் மற்றொரு தனிநபரான M.பழனி என்பவரை அரசு சாட்சிகள் மற்றும் காவலர் குழுவினரின் உதவியுடன் சோதனை செய்த போது அவரது சட்டை பாக்கெட்டில் பணம் ரூ.6,000/- வைத்திருந்தார். மேலும், அவரது கையில் TN 24 AV 3884 மற்றும் TN 47 L-6676 ஆகிய வாகனங்களின் பதிவு சான்றுகளும், TN 18 J 0245, TN 23 BX 8223, TN 38 AX 0105, TN 24 AY 8033 மற்றும் TN 24 AK 9163 ஆகிய வாகனங்களின் தகுதி சான்று இரசீதுகளும், புதிய பதிவு எண் பெறுவதற்காக

முன்பணம் ரூ.2000/- செலுத்தியதற்கான இரசீது எண்.NT240902791 ஒன்றும் வைத்திருந்தார். அவர் வைத்திருந்த பணம் குறித்து கேட்க, அது தனது சொந்தப் பணம் என்று தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததாலும், அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் கூறியதாலும் அந்த பணம் வாகன ஓட்டுனர்கள் மற்றும் உரிமையாளர்களிடமிருந்து லஞ்சமாக பெற்று மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ஆனந்தன் அவர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருக்ககூடும் என்று நம்புவதற்கான சரியான முகாந்திரம் இருந்ததால் மேற்படி பணம் ரூ.6,000/- விசாரணையின் நிமித்தம் செயல்முறை நடவடிக்கைகள் மூலம் என்னால் கைப்பற்றப்பட்டது. மேற்படி நபர் கையில் வைத்திருந்த ஆவணங்கள் அலுவலக ஆவணங்கள் என்பதால், மேற்படி ஆவணங்கள் ஒளிநகல் எடுக்கப்பட்டு மோட்டார் வாகன ஆய்வாளரிடம் சான்றொப்பம் பெறப்பட்டு விசாரணையின் நிமித்தம் செயல்முறை நடவடிக்கையின் போது என்னால் கைப்பற்றப்பட்டது. பின்னர், மேற்படி அறையில் இருந்த புதிய பேருந்து நிலையத்திற்கு எதிரே செயல்பட்டுவரும் செந்தில்ராஜா ஓட்டுநர் பயிற்சி பள்ளியில் வேலைசெய்துவரும் மற்றொரு தனிநபரான J.சென்றாயன் என்பவரை அரசு சாட்சிகள் மற்றும் காவலர் குழுவினரின் உதவியுடன் சோதனை செய்த போது அவரது சட்டை பாக்கெட்டில் ரூ.3,000/- வைத்திருந்தார். மேலும், அவரது கையில் 1) TN 24 AY 9077, 2) TN 29 AW 6349, 3) TN 11 AS 6091, 4) TN 28 AC 1346, 5) TN 33 AW 0605, 6) TN 24 AY 9534 மற்றும் 7) TN 59 AU 4546 ஆகிய 7 வாகனங்களுக்கான ‘தகுதி சான்று புதுப்பிப்பதற்கான ஆவணங்கள் வைத்திருந்தார். அவர் வைத்திருந்த பணம் குறித்து கேட்க, அது தனது சொந்தப் பணம் என்றும், தனது குழந்தைகளின் சீருடைகள் வாங்குவதற்க்காக வைத்திருந்த பணம் என்றும் தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததாலும், அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் கூறியதாலும் அந்த பணம் வாகன ஓட்டுனர்கள் மற்றும் உரிமையாளர்களிடமிருந்து லஞ்சமாக் பெற்று மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ஆனந்தன் அவர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருக்கக்கூடும் என்று நம்புவதற்கான சரியான முகாந்திரம் இருந்ததால் மேற்படி பணம் ரூ.3,000/- விசாரணையின் நிமித்தம் செயல்முறை நடவடிக்கைகள் மூலம் என்னால் கைப்பற்றப்பட்டது. மேற்படி நபர் கையில் வைத்திருந்த ஆவணங்கள் அலுவலக ஆவணங்கள் என்பதால், மேற்படி ஆவணங்கள் ஒளிநகல் எடுக்கப்பட்டு மோட்டார் வாகன ஆய்வாளரிடம் சான்றொப்பம் பெறப்பட்டு விசாரணையின் நிமித்தம் செயல்முறை நடவடிக்கையின்

போது என்னால் கைப்பற்றப்பட்டது. பின்னர், அந்த அறையின் கிழக்கு சுவரை ஒட்டி ஆவணங்கள் அடுக்கிவைக்கப்பட்டிருந்த ஒரு இரும்பு ரேக்கின் இரண்டாவது தட்டினை சோதனை செய்தபோது, மேற்படி தட்டில் அடுக்கிவைக்கப்பட்டிருந்த ஆவணங்களுக்கு பின்புறம் ஒரு காக்கிநிற கவர் மடித்து வைக்கப்பட்டிருந்தது. அதை அரசு சாட்சிகளின் உதவியுடன் எடுத்து எண்ணிப்பார்க்கையில் அதில் 500 ரூபாய், 200 ரூபாய் மற்றும் 100 ரூபாய் தாள்கள் என மொத்தம் பணம் ரூ.92,000/- இருந்தது. அந்த பணத்தை பற்றி மோட்டார் வாகன ஆய்வாளரிடம் விளக்கம் கேட்க, அதற்கு அவர் அந்த பணத்தை பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், ஆனால் அந்த அறை தனது உபயோகத்தில் உள்ள கணினி அறை என்றும் தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததாலும், அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் கூறியதாலும் அந்த பணம் பழைய வாகனங்களுக்கு FC கொடுப்பதற்காக வாகன உரிமையாளர்களிடமிருந்தும், ஓட்டுநர் பயிற்சி பள்ளி உரிமையாளர்களிடமிருந்தும் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ஆனந்தன் அவர்கள் லஞ்சமாக பெற்ற பணமாக இருக்ககூடும் என்று நம்புவதற்கான சரியான முகாந்திரம் இருந்ததால் மேற்படி பணம் ரூ.92,000/- காக்கிநிற கவருடன் விசாரணையின் நிமித்தம் செயல்முறை நடவடிக்கைகள் மூலம் என்னால் கைப்பற்றப்பட்டது. பின்னர் மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் அறைக்கு மேற்கு புறத்தில் 3 வரிசையில் 3 பகுதிகளாக தடுக்கப்பட்ட சிமெண்ட் அலமாரியில் பழைய ஆவணங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. அந்த அலமாரிகளில் வலதுபுறமிருந்து இரண்டாவது மேல் அறையிலிருந்த ஆவணங்களை வெளியே எடுத்து சோதனை செய்தபோது, அந்த ஆவணங்களுக்கு நடுவிலிருந்து ஒரு காக்கிநிற கவர் கிழே விழுந்தது. அந்த கவரை அரசு சாட்சிகளின் உதவியுடன் எடுத்து சோதனை செய்ததில், அதில் 500 ரூபாய் தாள்கள் மொத்தம் பணம் ரூ.28,000/- இருந்தது. நான் அந்த பணத்தை பற்றி மோட்டார் வாகன ஆய்வாளரிடம் விளக்கம் கேட்க, அதற்கு அவர் அந்த பணத்தை பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், தான் அந்த அலமாரியினை பயன்படுத்துவதில்லை என்றும் தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததாலும், அந்த அலமாரியானது அவரது அறைக்கு நேர் பின்புறமாக உள்ளதாலும் அந்த பணம் பழைய வாகனங்களுக்கு FC செய்வதற்காக வாகன உரிமையாளர்களிடமிருந்தும், ஓட்டுனர் பயிற்சி பள்ளி உரிமையாளர்களிடமிருந்தும் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ஆனந்தன் அவர்கள் லஞ்சமாக பெற்ற பணமாக இருக்கக்கூடும் என்று நம்புவதற்கான சரியான

முகாந்திரம் இருந்ததால் மேற்படி பணம் ரூ.28,000/- காக்கிநிற கவருடன் விசாரணையின் நிமித்தம் செயல்முறை நடவடிக்கைகள் மூலம் என்னால் கைப்பற்றப்பட்டது. பிறகு கிருஷ்ணகிரி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் 1) பணியாளர் வருகைப்பதிவேடு, 2) ஒப்பந்த பணியாளர் வருகைப்பதிவேடு (டெக்ஸ்கோ), 3) ஒப்பந்த பணியாளர் வருகைப்பதிவேடு (பாண்டன்), 4) பணியாளர்கள் பணம் கையிருப்பு பதிவேடு மற்றும் 5) கணினியிலிருந்து பதிவிறக்கம் செய்து எடுக்கப்பட்ட கணக்கு விவர அறிக்கை ஆகிய ஆவணங்கள் என்னால் பார்வையிடப்பட்டது. அந்த ஆவணங்களை பார்வையிட்டதற்கு அடையாளமாக நானும், அரசு சாட்சிகளும் சம்மந்தப்பட்ட பக்கங்களில் கையொப்பங்கள் செய்து மேற்படி ஆவணங்கள் ஒளிநகல் எடுக்கப்பட்டு அலுவலக கண்காணிப்பாளர் திரு.M.வெங்டேசன் அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு விசாரணையின் நிமித்தம் செயல்முறை நடவடிக்கையின் போது என்னால் கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக 20.09.2024 காலை 11.30 மணி முதல் இரவு 19.45 மணிவரையில் என்னால் ஒரு செயல்முறை நடவடிக்கைகள் தயார் செய்யப்பட்டது. அதில் நானும், அரசு சாட்சிகளும் கையொப்பம் செய்தோம். மேலும் அதன் நகல்கள் கிருஷ்ணகிரி மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 திரு.V.ஆனந்தன், தனிநபர்கள் திரு.B.ஷரிப், திரு.M.பழனி மற்றும் J.சென்றாயன் ஆகியோருக்கு இலவசமாக வழங்கப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின் முடிவில் கிருஷ்ணகிரி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பணிபுரியும், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 திரு.V.ஆனந்தன் அவர்கள் அவருடைய அலுவலக பணியை செய்து கொடுத்தமைக்காக இடைத்தரகர்கள் மூலம் கையூட்டாக பணம் பெற்று அதை மறைத்து வைத்திருப்பதற்கான நம்பத்தகுந்த காரணம் உள்ளதாலும் அவர் ஊழல் தடுப்புச் சட்டம் 1988 திருத்தப்பட்ட சட்டம் 2018 பிரிவு 7(a)-ன் கீழ் குற்றம் புரிந்துள்ளார் என்பதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதாலும், மேலும் இடைத்தரகர்கள் திரு.B.ஷரிப், திரு.M.பழனி மற்றும் J.சென்றாயன் ஆகியோர் மோட்டார் வாகன ஆய்வாளர், நிலை-1 திரு.V.ஆனந்தன் அவர்கள் ஊழல் தடுப்புச் சட்டம் 1988 திருத்தப்பட்ட சட்டம் 2018 பிரிவு 7(a)-ன் கீழ் குற்றம் புரிவதற்காக அவருக்கு குற்ற நோக்குடன் உதவி புரிந்து உடந்தையாக இருந்ததன் மூலமாக அவர்கள் மூவரும் ஊழல் தடுப்புச் சட்டம் 1988 திருத்தப்பட்ட சட்டம் 2018 பிரிவு 7 உ/ இ 12-ன் படியும் குற்றம் புரிந்துள்ளார்கள் என சந்தேகிக்க போதுமான சரியான முகாந்திரம் இருப்பதால் எதிரிகள் மீது இன்று 20.09.2024 ஆம் தேதி இரவு 21.30 மணிக்கு

கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.05/AC/2024, u/s 7 (a) & 7 r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி குற்ற வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசலை கைப்பற்றுப்பட்ட சொத்துக்களுடன் கிருஷ்ணகிரி மாவட்ட சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்தேன்.

SI/VAC,KGI
20/09/24

காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
கிருஷ்ணகிரி